மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் கோயம்புத்தூர் 100 அடி ரோடு கிளையில் புதிய தங்க நகை கலெக்சன் அறிமுகம்

கோயம்புத்தூர், டிச.02

கோயம்புத்தூர் 100 அடி ரோடு மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் ஷோரூமில் ஸ்வர்ணகிருதி என்ற புதிய தங்க நகை கலெக்ஷன் அறிமுகம். இந்த புதிய கலெக்சனை ராதா பெல்லன் (நிறுவனர் அனைத்து மகளிர் தொழில் முனைவோர் சங்கம் கோயம்புத்தூர்), பிரபா பழனிவேல் (தாளாளர் ஆதிரா சர்வதேச பள்ளி கோயம்புத்தூர்), ஆகியோர் அறிமுகப்படுத்தினர், இந்நிகழ்ச்சியில் நௌசாத் (மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் தமிழ் நாடு மேற்கு மண்டலா தலைவர்), ரபிக் (மலபார் கோல்டு & டைமண்ட்ஸ்கோயம்புத்தூர் 100 அடி ரோடு கிளை மேலாளர்), தேவராஜ் (மலபார் கோல்டு & டைமண்ட்ஸ்கோயம்புத்தூர் 100 அடி ரோடு கிளை வர்த்தக மேலாளர்), மற்றும் கிளை ஊழியர்கள் ஆகியோர் உடனிருந்தனர். மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் தற்போது 13 நாடுகளில் 360க்கும் மேற்பட்ட சில்லறை விற்பனை நிலையங்களுடன் உலகில் மிகப்பெரிய நகை விற்பனை நிறுவனமாக உருவெடுத்துள்ளது.

தமிழ்நாட்டில் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோயில், சேலம், திருச்சி, ஈரோடு, வேலூர், இராமநாதபுரம், ஈரோடு, தருமபுரி, தஞ்சாவூர், கும்பகோணம், திருப்பூர், காரைக்குடி, மயிலாடுதுறை, புதுக்கோட்டை, மார்த்தாண்டம், புதுச்சேரி, கரூர் ஆகிய நகரங்களில் 29 கிளைகளை கொண்டு உள்ளது.

மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் விற்பனையகத்தில் கலைநயமிக்க அணிகலன்கள் கிடைப்பது சிறப்பம்சமாகும். அணிந்தாலே ஜொலிக்கும் வைர நகைகளான மைன் பிரம்மாண்டமான வடிவமைப்புகளை கொண்டுள்ள வெட்டாத வைரத்தால் செய்யப்பட்ட எராமிகவும் பொக்கிஷமாக கருதப்படும் விலை உயர்ந்தகற்களால் செய்யப்பட்ட நகை தொகுப்பான பிரீசியா நகைகள், கைவினை கலைஞர்களால் கையால் செய்யப்பட்ட நகைகளின் தொகுப்பான எத்தினிக் நமது கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் பாரம்பரிய இந்திய நகை வடிமைப்புகளில் உருவான டிவைன் குழந்தைகளுக்கான நகை தொகுப்பான ஸ்டார் லெட் ஆகியவை இந்த கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன. இதைத் தவிர அழகிய நகைகளை சிறப்பு சலுகையில் வாங்கவும் வாய்ப்பளிக்கப்படுகிறது.

ஒட்டன்சத்திரம் வந்த தமிழக ஆளுநருக்கு மாவட்ட கலெக்டர் வரவேற்பு

ஒட்டன்சத்திரம், டிச.02

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் பகுதிக்கு வந்த தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி கோயமுத்தூரில் இருந்து மதுரை செல்லும் வழியில் ஒட்டன்சத்திரம் நெடுஞ்சாலைத்துறை விருந்தினர் மாளிகையில் வருகை புரிந்தார்.

அங்கு அவருக்கு திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் ம.நொ. பூங்கொடி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரதீப் ஆகியோர் மலர் கொத்து கொடுத்து வரவேற்றனர்.

இதைத்தொடர்ந்து காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஆளுநர் ஏற்றுக் கொண்டார்.

பிறகு சிறிது நேரம் நெடுஞ்சாலை விருந்தினர் மாளிகையில் ஓய்வு எடுத்த பின்னர் மீண்டும் மதுரை நோக்கி காரில் புறப்பட்டு சென்றார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கடலூர் மாவட்டத்தில் பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கினார்

கடலூர், டிச.02

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் கடலூர் மாவட்டத்தில் பெங்கல் புயலின் காரணமாக மீட்கப்பட்டு பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு கந்தசாமி நாயுடு மகளிர் கலைக் கல்லூரியில் நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

இதன் காரணமாக கடலூர் மாவட்டத்தில் 17 நிவாரண முகாம்கள் திறக்கப்பட்டு 703 பொதுமக்கள் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதுவரை 3,078 நபர்களுக்கு உணவு பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் மீட்புப் பணிகளை விரைவுபடுத்தி பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை மீண்டும் விரைந்து திரும்பிட உத்திரவிட்டதன் அடிப்படையில் போர்க்கால அடிப்படையில் மீட்புப் பணிகள் நடைபெற்று வருகிறது.

தொடர்ந்து, கடலூர் கந்தசாமி மகளிர் கலைக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு மையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள 256 பொதுமக்களுக்கு பிஸ்கட், பால், அரிசி, பிரட் உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை வழங்கினார். பல் வேறு பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரினை அகற்றி சீரான போக்குவரத்து மற்றும் பொதுமக்களுக்கான இயல்பு நிலையினை ஏற்படுத்திட துறை அலுவலர்களுக்கு உத்திர விட்டார்.

இந்நிகழ்ச்சியில் வனத் துறை அமைச்சர் பொன்முடி, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி, போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ. ஐயப்பன், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.ராஜேந்திரன், மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரிராஜா, ஊரக வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன் தீப் சிங் பேடி தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டு திட்ட இயக்குனர்/ மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ராமன், மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார், மாநகராட்சி துணைமேயர் பா. தாமரைச்செல்வன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

குழந்தைகளுக்கான பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நடைபயண பேரணி: கலெக்டர் தொடங்கி வைத்தார்

பெரம்பலூர், டிச.02

பெரம்பலூர் நகராட்சிக் குட்பட்ட பாலக்கரையில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் வாயிலாக குழந்தை களுக்கான பாதுகாப்பு குறித்த கல்லூரி மாணவியர்களின் விழிப்புணர்வு நடை பயண பேரணியை மாவட்ட கலெக்டர் கிரேஸ் பச்சாவ் தலைமையேற்று கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

ஒவ்வொரு ஆண்டும் குழந்தைகளுக்கான பாதுகாப்பு குறித்து தேசிய அளவிலான குழந்தைகள் தினவிழா கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அதனையொட்டி, பெரம்பலூர் மாவட்டத்தில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் சார்பில் குழந்தைகளின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு, குழந்தைகளுக்கு எதிராக நடைபெறும் குற்றங்களை தடுத்தல் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கல்லூரி மாணவியர்களின் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

இப்பேரணியில் பங்கேற்ற தந்தை ஹேன்ஸ் ரோவர் வேளாண்மை கல்லூரியைச் சேர்ந்த மாணவியர்கள் இலவச குழந்தைகள் உதவி மையத்தின் எண் 1098, குழந்தைகளின் வருமானம் சமுதாயத்தின் அவமானம், குழந்தைகளிடம் பாலின வன்முறை தண்டனைக்குரிய குற்றம், கொடுக்காதே! கொடுக்காதே! குழந்தைகளுக்கு பாலியல் தொல்லை கொடுக்காதே!, ஒன்றுபடுவோம் உறுதி ஏற்போம்! குழந்தைகளை பாதுகாப்போம், செய்யாதே, செய்யாதே, குழந்தை திருமணம் செய்யாதே, பெண்ணுக்கு திருமண வயது 18, போன்ற விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறும், குழந்தைகளுக்கு எதிரான பாலியல் சட்டங்கள், பெண் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் குறித்தும் உரக்க கோசமிட்டபடியே சென்று பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

இப்பேரணியானது பாலக்கரையில் தொடங்கி நகரின் முக்கிய சாலை வழியாக சென்று பெரம்பலூர் பழைய பேருந்து நிலையம் அருகில் நிறைவுற்றது. பேரணியில் 250க்கும் மேற்பட்ட தந்தை ஹேன்ஸ் ரோவர் வேளாண்மை கல்லூரி மாணவிகள் மற்றும் குழந்தைகள் இல்ல பணியாளர்கள் பங்கேற்று விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இப்பேரணியில் பங்கேற்ற மாணவியர்களிடம், குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் நிகழ்ந்தால் உடனடியாக 1098 என்ற இலவச குழந்தைகள் உதவி மையத்தினை தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் எனவும், பெண்குழந்தைகள் விழிப்பு ணர்வுடன் இருக்க வேண்டுமென மாவட்ட கலெக்டர் அறிவுறுத்தினார்.

இந்த நடை பயண பேரணியில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்(பொ) .மு.தர்மசீலன், குழந்தைகள் நலக் குழு தலைவர் இரா. செந்தில்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கழக பொதுச் செயலாளர் முன்னாள் முதல்வர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் புரட்சித்தமிழர் டாக்டர் எடப்பாடியார் அறிவுறுத்தலின்படி செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில் பெங்கல் புயல் மழையால் செய்யூர் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரிசி, காய்கனிகள், உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மாவட்ட வழக்கறிஞர் பிரிவு செயலாளர் ஜெயசந்திரன், கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

தேனி மாவட்டம் கம்பம் நகர த.மு.மு.க சார்பில் பாவலர் படிப்பகம் அருகே வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கையாக நிலவேம்பு கசாயம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் அரசு சித்த மருத்துவர் சிராஜுதீன், நகர்மன்ற உறுப்பினர் சாதிக் த.மு.மு.க நிர்வாகிகள் அப்பாஸ், அன்சாரி, சலீம், ஜெய்லானி, ஹக்கிம், அப்பாஸ், உசுப் அன்சரி, முஜாகுத், அம்ஜத்கான, மதர்சா ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு கசாயம் வழங்கினர்.

50 அடி ஆழ கிணற்றில் விழுந்த ஜல்லிக்கட்டு காளை உயிருடன் மீட்ட தீயணைப்பு துறையினர்

விராலிமலை, டிச.01

புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் தாலுகா மேட்டுச்சாலை கிழக்குபகுதியைசேர்ந்த முத்துசாமி என்பவருக்கு சொந்தமான சுமார் 50 அடி ஆழமுள்ள கிணற்றில் ஜல்லிக்கட்டு காளை ஒன்று தவறி விழுந்து கிணற்றின் தண்ணீரில் உயிருக்கு போராடிக்கொண்டிருந்தது.

இந்நிலையில் இதனைக் கண்ட அப்பகுதி பொதுமக்கள் இலுப்பூர் தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவித்தனர்.

இதனை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த இலுப்பூர் தீயணைப்புத் துறையினர் தன் குழுவுடன் சென்று பணியாளர்கள் கயிற்றை பயன்படுத்தி கிணற்றில் இறங்கி ஜல்லிக்கட்டு காளையை உயிருடன் மிகத் துரிதமாக மீட்டனர். மீட்ட ஜல்லிக்கட்டு காளையை அதன் உரிமையாளர் லோகேஷ் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

மேலும் ஜல்லிக்கட்டு காளையை உயிருடன் மீட்ட தீயணைப்பு பணியாளர்களுக்கும் நிலைய அலுவலர்களுக்கும் அப்பகுதி பொதுமக்கள் பாராட்டு தெரிவித்தனர்.

எல்&டி பைனான்ஸ் லிமிடெட்
(முந்தைய பெயர் எல்&டி பைனான்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்)
பதிவு அலுவலகம்: எல்&டி பைனான்ஸ் லிமிடெட் பிருந்தாவன் பில்டிங், ஃபிளாட் நம்பர் 177, சிஎஸ்டி ரோடு, கலினா, சாந்தாகுரூஸ் (ஈஸ்ட்), மும்பை - 400 098.
சிஐஎன் நம்பர்: L67120MH2008PLC181833
கிளை அலுவலகம்: சென்னை

L&T Finance

அடைமானம் வைக்கப்பட்ட சொத்தின் விற்பனைக்கான பொது ஏலம்

எல்&டி ஃபைனான்ஸ் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி செக்யூரிட்டிசேஷன் அண்ட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் பைனான்சியல் அசெட்ஸ் அண்ட் என்ஃபோர்ஸ்மெண்ட் ஆஃப் செக்யூரிட்டி இன்டரஸ்ட் ஆக்ட் 2002 (54 ஆஃப் 2002) கீழ் மற்றும் மேற்படி சட்டத்தின் கீழ் அவருக்குரிய அதிகாரங்களை பயன்படுத்தி கீழ்க்கண்ட சொத்தை **''இருக்கும் இடம்'' மற்றும் ''இருக்கும் நிலை''** என்ற அடிப்படையில் **''பொது ஏலம்''** மூலம் கடன் பாக்கி மற்றும் அது சம்பந்தமான கூடுதல் வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவினங்களை வசூலிக்க ஏலம் விட உள்ளார்.

கடன்தாரர் மற்றும் உப கடன்தாரர் பெயர்	பிணையச் சொத்து முகவரி	கடன் கணக்கு எண்	சொத்து கையகப்படுத்தப்பட்டது	ரிசர்வ் விலையின் பிணை உறுதிப் பணம் வைப்பு 10% அல்லது அதிகம் (₹)	28.11.2024 அன்று பஞ மொத்தம் நிலுவை பாக்கி தொகை	ரிசர்வ் விலை (₹)	ஆய்வு தேதி	ஏலத்தின் தேதி மற்றும் நேரம்
1. பிரான்சிஸ் அந்தொனி டி 2. மஞ்சு பார்கவி	சொத்தின் முகவரி - ப்ளாட் எண் 203 சூப்பர் பில்ட்அப் பகுதி 1603 சதுர அடி. கட்டிடத்தின் 2வது தளம், பிளாக் எண் A-17 என பெயரிடப்பட்டது, ஸ்டில்ட் தளத்தில் கார் நிறுத்துவதற்காக இடம் ஒதுக்கப்பட்டு பயன்பாட்டு உரிமையுடன் கூடியது. நெடுங்குன்றம் கிராமம், தாம்பரம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம் (முன்பு செங்கல்பட்டு வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்) எஸ்எஸ்எம் நகர், வீட்டு வளாகம், மொப்பேடு புதூர் சாலை, ஆளப்பாக்கனு பெருங்களத்தூர், சென்னை 600063, -ல் அமைந்துள்ளது, சென்னை-தெற்கு பதிவு மாவட்டம் மற்றும் தாம்பரம் துணை மாவட்டத்திற்குள் உள்ளது.	H0086609 10200257 05 & H0086609 10200257 05L & H0086609 10200257 05G	25 மே, 2024	ரூ. 4,93,322/-	ரூ. 41,94,214.44/-	ரூ. 49,33,224/-	முன் அப்பாயின்ட் மென்ட் உடன் அனைத்து பணி நாட்களிலும்	23.12.2024 காலை 10 மணி முதல் மாலை 5.30 மணி வரை

பொது ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

1. மின்னணு ஏல விற்பனை, சர்ஃபேஸி சட்ட பிரிவுகளின் கீழ் மற்றும் பொது மின்னணு ஏல முறை மூலம் https://sarfaesi.E-auctiontiger.net இணையதளம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ஆன்லைனில் நடத்தப்படுகிறது.
2. இங்கே மேலே குறிப்பிடப்பட்ட நாள் அன்று மற்றும் நேரத்தில் பொது மின்னணு ஏலம் நடத்தப்படும், மேலே குறிப்பிடப்பட்ட பிணை சொத்து **''எங்கே உள்ளது என்பதன் அடிப்படையில்'' மற்றும் ''எந்த நிலையில் உள்ளது என்பதன் அடிப்படையில்''** விற்கப்படும்.
3. பொது மின்னணு ஏலத்தில் பங்கேற்பதற்காக, உத்தேசித்துள்ள வாங்குபவர்கள் / ஏலதாரர்கள் ஏல படிவத்தை, திருப்பியளிக்கத்தக்க பிணை சொத்தின் ரிசர்வ் விலையின் பிணை உறுதிப் பணம் வைப்பு 10% அத்துடன் பான் அட்டை, நிறுவனம் என்னும் நிலையில் குழு தீர்மானங்கள் மற்றும் முகவரிச் சான்று நகல்களை 21.12.2024 அன்று அல்லது அதற்கு முன்பாக சமர்ப்பிக்க வேண்டும்.
4. பொது மின்னணு ஏலத்தில் வெற்றி பெற முடியாத இதர அனைத்து ஏலதாரர்களின் பிணை உறுதிப் பணம் வைப்பு தொகை பொது மின்னணு ஏலம் முடிவுற்ற 7 நாட்களுக்குள்ளாக LTFல் திருப்பி அளிக்கப்படும். பிணை உறுதிப் பணம் வைப்பு தொகைக்கு எந்த வட்டியும் கிடையாது.
5. மின்னணு ஏலத்தில் வெற்றி பெறும் வாங்குபவர்/ஏலதாரர் அவரது/அதன் ஆஃபரில் 25% தொகையை (இஎம்ஐ உட்பட) எல்&டி பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயரில் மதுரையில் பெறத்தக்கதாக டி.டி./பி. ஓ மூலம் 23.12.2024 தேதி அன்று 18.00 மணிக்குள் அல்லது அதற்கு முன்பு அதாவது ஏல தேதி அன்று அல்லது அடுத்த அலுவல் நாளில் அதாவது 24.12.2024 அன்று செலுத்தப்பட்டு அந்த டெபாசிட் தொகை பெற்றுக் கொள்ளப்பட்டதாக எல்&டி பைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தால் உறுதி செய்யப்பட வேண்டும். இல்லையெனில் விற்பனை தோல்வி அடைந்து விட்டதாக கருதப்பட்டு வெற்றி பெற்ற ஏலதாரரின் இஎம்டி பறிமுதல் செய்யப்படும். வாங்கும் விலையில் மீதி தொகை அதாவது 75% வாங்குபவரால் எல்&டி பைனான்ஸ் லிமிடெட்டுக்கு, அசையா சொத்து விற்பனை உறுதி செய்யப்பட்ட பின் பதினைந்தாம் நாள் அன்று அல்லது அதற்கு முன்பாக அல்லது சட்டப்பிரிவுகளின்படி இத்தகைய நீட்டிக்கப்படும் காலவரம்பிற்குள் செலுத்தப்பட வேண்டும்.
6. சொத்து ஆய்வு செய்வதற்காக அல்லது அதிக தகவலுக்கு, வாய்ப்புள்ள ஏலதாரர்கள், அங்கீகாரம்பெற்ற அதிகாரியுடன் தொடர்பு கொள்ளலாம், அதாவது **பெயர் - திரு. சதீஷா ஆர், தொர்பு எண் 9738141146 மற்றும் சந்தோஷ் திவாரி, தொடர்பு எண் 9920490126, எல்&டி ஃபைனான்ஷியல் சர்வீசஸ் லிமிடெட், அலுவலகம் : 6வது தளம், பிருந்தாவன் பில்டிங், பிளாட் எண் 177, கலினா, சிஎஸ்டி ரோடு, மர்சிடெஸ் ஷோரூம் அருகில், சாந்தாக்ரூஸ் (கிழக்கு) , மும்பை - 400098.** இ- ஏலத்தின் எந்த நிலையிலும், அங்கீகாரம்பெற்ற அதிகாரி எந்த காரணத்தையும் குறிப்பிடாமல் மற்றும் எந்த முன் அறிவிப்பும் இன்றி, ஏலத்தை ஏற்கலாம்/ நிராகரிக்கலாம்/ திருத்தலாம்/ ஏலத்தை/சலுகையை ரத்து செய்யலாம் அல்லது தள்ளிப் போடலாம்.
7. வெற்றி பெற்ற வாங்குபவர்/ஏலதாரர் சொத்தை தன்னுடைய பேரில் சாதகமாக மாற்றிக்கொள்ள பொருந்தும் சட்டத்தின் படி, ஏதேனும் சட்டபூர்வ நிலுவைத் தொகைகள், வரிகள், செலுத்த வேண்டிய கட்டணங்கள், முத்திரை வரி, பதிவு கட்டணங்கள் முதலியவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும்.
8. மேற்கண்ட பாக்கித் தொகைகளுக்கு பொறுப்பான வாங்குபவர்/உத்தரவாதிகள் இந்த விற்பனை அறிவிப்பை, பொது மின்னணு ஏல விறபனையை நடத்த, செக்யூரிட்டி இன்டரஸ்ட் (என்ஃபோர்ஸ்மெண்ட்) ரூல்ஸ் விதி 8(6) கீழ் ஒரு அறிவிப்பாக கருதும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
9. கடன் வாங்குபவர் (கள்) / உப கடன்தாரர் (கள்) / உத்தரவாதி (கள்) / பிணையதாரர் (கள்) மேலே குறிப்பிட்டபடி கடன் நிலுவையில் உள்ள முழு நிலுவைத் தொகையையும் மேற்கூறிய மின்னணு ஏலத் தேதிக்கு முன்னர் செலுத்தும்படி கேட்கப்படுகின்றனர். அவ்வாறு செலுத்தத் தவறினால், எல்&டி பைனான்ஸ் லிமிடெட், சர்ஃபேசி சட்டம், 2002 கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி சொத்தை விற்கும்.
10. கடன்தாரர் (கள்) / உப கடன்தாரர் (கள்) / உத்தரவாதி (கள்) / பிணையதாரர் (கள்) / பொது மக்கள் எல்&டி பைனான்ஸ் லிமிடெட் இடும் முன்னரே எழுத்துப்பூர்வமான அனுமதி பெறாமல் சம்பந்தப்பட்ட பிணைய சொத்துக்களை விற்பனை செய்தல். குத்தகைக்கு விடுதல் மற்றும் இதர நடவடிக்கைளை கையாள்வதில் இருந்து தடைசெய்யப்பட்டுள்ளனர்.

தேதி: 02.12.2024
இடம்: சென்னை

கையெழுத்து/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
எல்&டி பைனான்ஸ் லிமிடெட்